
பக்கங்கள்: 07

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 ஐப்பசி 13 வியாழக்கிழமை 30.10.2025 கதிர் 354

## இது ரகசியம் அல்ல!



அரசியல் தீர்வு தொடர்பில் பேசுவதற்கு நேரம் ஒதுக்கித் தரும்படி கேட்டு தமிழ் அரசுக் கட்சி அரசுத் தலைவர் அநுரகுமாரவிற்கு அனுப்பிய கடிதத்திற்கு ஒரு ☞2

## கட்டுநாயக்கா வானூர்தி நிலையத்தில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த மூவர் கைது

### வெடிகுண்டை மறைத்து வைத்திருந்தவர்களாம்

யாழ்ப்பாணம் வல்வெட்டித் துறை பகுதியில் விடுதலைப் புலிகளின் வெடிகுண்டு என சந்தேகிக்கப்படும்குண்டுமீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த மூன்று சந்தேகநபர்களை கட்டுநாயக்கவிமானநிலையத்தில் வைத்து பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

வல்வெட்டித்துறை பகுதியில் கடந்த சில வாரங்களுக்கு முன்னர், வெடிகுண்டு ஒன்று பொலிஸாரால் மீட்கப்பட்டது. அது தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த நிலையில் ,குறித்த வெடிகுண்டினை மறைத்து ☞2

## நீதிவான் மன்றில் வைக்கப்பட்டிருந்த சான்றுப் பொருளான துப்பாக்கியை திருடிய சிறைக் கைதி மாட்டினார்

கல்கிஸ்ஸை நீதவான் நீதிமன்றத்திலிருந்த துப்பாக்கி திருடப்பட்ட சம்பவத்தில், வழக்குப்பொருள் வைக்கப்பட்டும் களஞ்சிய சாலையில் துப்புரவு பணியில் ஈடுபட்ட சிறைக்கைதி ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கல்கிஸ்ஸை நீதவான் நீதிமன்றத்தின் வழக்குப் பொருட்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள களஞ்சிய சாலையில் துப்புரவு செய்வதற்காக, நீதிமன்றத்தின் கோரிக்கையின் பேரில் நேற்று (29) 3 சிறைக்கைதிகள் வருகைத்தந்துள்ளனர். அவர்களில்ஒருசிறைக்கைதிகளஞ்சியசாலையிலிருந்த கைத்துக்பாக்கிஒன்றைதிருடிசிறைச்சாலைபேருந்தில் ஏறியுள்ளார் என சிறைச்சாலை ஊடகப்பேச்சாளரும் ஆணையாளருமானஜகத்வீரசிங்கதெரிவித்துள்ளார்.

சிறைச்சாலைபேருந்துநீதிமன்றத்திருந்துமீண்டும் சிறைச்சாலை நோக்கிச் சென்ற போது, துப்பாக்கியை எடுத்து வந்த கைதி பையொன்றுடன் அமர்ந்திருந்தார். சந்தேகநபரின் கையில் பையொன்றிருப்பதை அவதானித்த சிறைச்சாலை அதிகாரிகள் ☞6

## இலங்கையில் இதற்கு முன்னர் ஒருபோதும் இந்தளவு பாதுகாப்பற்ற சூழல் ஏற்படவில்லை

### ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. எடுத்துரைப்பு

நாட்டில் இதற்கு முன்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இந்தளவுக்கு பாது காப்பற்ற சூழல் நாட்டில் ஏற்படவில்லை. தேசியபாதுகாப்பைஉறுதிப்படுத்துவதாக தேசிய மக்கள் சக்தி வழங்கிய வாக்கு றுதிக்கு என்ன ஆனது? எங்கு துப்பாக் கிச்சூடு நடத்தப்பட்டாலும் அது பாதாள உலகக்குழுவுடன் தொடர்புடையது எனக் கூறி தப்பிக்க முற்பட வேண்டாம் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜித் சஞ்சய பெரேரா தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று செய்தியா ளர்களிடம் இதனைத் தெரிவித்த அவர், மேலும் தெரிவித்ததாவது:

தேசிய பாதுகாப்பு உறுதிப்படுத்தப் படவேண்டும் என்று தற்போதைய அமைச்சர்களும், ஆளுந்தரப்பு நாடாளு மன்ற உறுப்பினர்களும் தேர்தலுக்கு முன்னர் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தனர்.அதனைக்கூறியேஆட்சியையும் கைப்பற்றினர். எதிர்க்கட்சியினருக்கு தேசிய பாதுகாப்பு தொடர்பில் கற்பிப்பதாகவும் கூறினர். ஆனால் இவர்கள்ஆட்சியமைத்ததன்பின்னர்தேசிய பாதுகாப்பு எந்த நிலையிலிருக்கின்றது என்பதை நாம் அறிவோம்.

அன்றாடம் இடம்பெற்று வரும் துப்பாக்கிச்சூடுகளால் மக்களின் உயிருக்கு எந்தளவு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்பதை நாம் ☞2

## கடலில் மிதந்து வந்த போத்தலில் இருந்த மர்மத் திரவத்தை அருந்திய இரண்டு பேர் உயிரிழப்பு

### நுரைச்சோலையில் சோகம்

நுரைச்சோலை பகுதியில் கடலில் மிதந்து வந்து கரையொதுங்கிய போத்தல் ஒன்றிலிருந்த அறியப்படாத திரவத்தை அருந்திய இருவர் உயிரிழந்துள்ளனர். அத்தோடு குறித்த திரவத்தை அருந்திய மேலும் இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளம்நுரைச்சோலைபொலிஸ்பிரிவுக்குட்பட்ட 'லக்ஜய' மின் உற்பத்தி நிலையத்துக்கு அருகில் உள்ள கடற்கரை வாடியில் (பொழுது களிக்கும் இடம்) இருந்த நான்கு பேர் அடங்கிய குழுவொன்று கடலில் மிதந்து வந்து கரை ஒதுங்கியிருந்த போத்தல் ஒன்றிலிருந்த அறியப்படாத திரவம் ஒன்றை அருந்திப் பார்த்துள்ளனர். இதன் பின்னர் திடீர் சுகயீனமுற்ற அந்தக் குழுவினர் செவ்வாய்க்கிழமை புத்தளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

அவர்களில் ஒருவர் சேர்க்கப்பட்ட அன்றே வைத்தியசாலையில் உயிரிழந்தார், மற்றோரு நபர் நேற்று அதிகாலை உயிரிழந்தார். 28 மற்றும் 29 வயதுடைய புத்தளம் பகுதியை ☞2

## எம்.பிக்களின் பாதுகாப்பு பற்றி ஆராய பொலிஸ் மா அதிபரை அழையுங்கள்

### எதிர்க் கட்சிகள் சபாநாயகரிடம் கோரிக்கை

நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு தொடர்பிர் கலந்துரையா டுவதற்காகபொலிஸ்மாஅதிபர்பிரியந்த வீரசூரியவை நாடாளுமன்றத்துக்கு அழைக்குக்குமாறு எதிர்க்கட்சிகள் சபாநாயகர் ஜகத் விக்ரமரத்னவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளன.

இந்த வேண்டுகோள் தொடர்பில் எதிர்கட்சிகளின் பிரதமகொறடா கயந்த கருணாதிலக்க குறிப்பிடுகையில், நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்புதொடர்பானபிரச்சினைகளை தீர்த்துக்கொள்வதற்காக பொலிஸ்மா அதிபருடன் கூட்டமொன்றை ஏற்பாடு செய்யுமாறு எதிர்க்கட்சிகள் சபாநாயகரிடம் கடந்த திங்கட்கிழமை கேட்டிருந்தன.

சபாநாயகர் தற்போது வெளிநாடு சென்றிருப்பதால் இந்தக் கோரிக்கைக் கடிதம், சபாநாயகர் காரியாலயத்தின் ஊடாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சினால் அது தொடர்பாகக் கலந்துரையாட ஒரு நாள் ஒதுக்கப்படும் என நம்புக்கிறோம் என்று எதிர்க் கட்சிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

## பெலவத்த சீனித் தொழிற்சாலையை இந்தியாவிற்கு விற்பதற்கு முயற்சி

### ஆளும்தரப்பு மீது விமல் வீரவன்ஸ குற்றச்சாட்டு

பெலவத்த சீனிக் கைத்தொழிற்சாலையின் நிதி நெருக்கடியை தீவிரப்படுத்தி தொழிற்சாலையை இந்தியாவுக்கு விற்பனை செய்ய ஆளும்தரப்புத் தீர்மானித்துள்ளது. ஆளும்தரப்பின் இந்த முறையற்ற செயற்பாட்டுக்கு எதிராக நாட்டு மக்கள் ஒன்றிணைய வேண்டும் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச வலியுறுத்தினார்.

கொழும்பில் உள்ள தேசிய சுதந்திர முன்னணி பணியகதில் நேற்று நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பின்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நட்டத்தை எதிர்கொண்டுள்ள பெலவத்த சீனிக் கைத்தொழிற்சாலையை அபிவிருத்தியடையச் செய்வதற்குஆளும்தரப்புஎவ்விதநடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. மாறாக நிதி நெருக்கடியை மென்மேலும் தீவிரப்படுத்தும் வகையில் செயற்படுகிறது.

அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்தும் விடயத்தை கடந்த காலங்களில் கடுமையாக விமர்சித்த அரசுத் தலைவர் அநுரகுமார தற்போது அந்தக் கொள்கையையே செயற்படுத்துகிறார்.

பெலவத்த சீனிக் கைத்தொழிற்சாலையின் நிதி நெருக்கடியைத்தீவிரப்படுத்திதொழிற்சாலையை இந்தியாவுக்குவிற்பனைசெய்யஆளும்தரப்புத் ☞2

## லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் நீதிமன்றப் பணியாளர் கைது

10 ஆயிரம் ரூபா பணத்தை இலஞ்சமாகக் பெற்றுக்கொண்ட கொழும்பு 12 மாவட்ட நீதிமன்ற அலுவலக உதவியாளர் ஒருவர் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவிற்குகிடைத்ததகவலின் அடிப்படையில், மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார்என்றுவிசாரணை அதிகாரிகள் தெரிவித்தனர்.

கொழும்பு 12 மாவட்ட ☞2

## அடுத்த 5 வருடத்தில் சீனாவின் வளர்ச்சி இலங்கையின் விருத்திக்கும் வழிவகுக்கும்

### அந்த நாட்டுத் தூதுவர் நம்பிக்கை

சீனாவின் நீண்டகால ஒத்துழைப்புப் பங்காளி என்ற ரீதியில், அடுத்த 5 வருடகாலத்தில் சீன அடையவிருக்கும் வளர்ச்சியானது இலங்கையின் அபிவிருத்திக்கும், சுபீட்சத்துக்கும் அவசியமான வாய்ப்புக்களை வழங்கும் என இலங்கைக்கான சீனத்தூதுவர் சி சென்ஹொங் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

சீனாவில் 15ஆவது தடவையாக நடைமுறைப்படுத்தப்படும் ஐந்தாண்டுத் திட்ட அமுலாக்கத்தை அடுத்து 'புத்தாக்கம் பகிரப்பட்ட அபிவிருத்திக்கு வாய்ப்பளிக்கிறது' ☞2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

மாதமாகியும் பதில் கிடைக்கவில்லை என்பதை சுவிஸ் தூதுவருடனான தனது சந்திப்பில் சுட்டிக்காட்டியிருக்கிறார் தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர் சுமந்திரன்.

தமிழ் அரசுக் கட்சி இந்தக் கடிதத்தை எழுதியபோது அரசுத் தலைவர், ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் உரையாற்றுவதற்காக அமெரிக்கா புறப்பட்டிருந்தார். அவர் நாடு திரும்பியதும் தமிழ் அரசுக் கட்சியுடன் பேசுவதற்கு நாள் குறிக்கப்படும் என்று சில நாள்களின் பின்னர் அமைச்சர் சந்திரசேகரன் யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களிடம் தெரிவித்திருந்தார்.

ஆனால் அதில் உண்மையில்லை என்பதை நான் அன்றே சுட்டிக்காட்டியிருந்தேன். அரசுத் தலைவர் நாடு திரும்பினால்தான் தமிழ் அரசுக் கட்சியினரைச் சந்திக்க முடியும் என்கிற ஒரு பொது அடிப்படையில் அமைந்ததே அமைச்சர் சந்திரசேகரனின் கருத்து. அதைத் தவிர அப்படியான சந்திப்புக்கு எந்த ஏற்பாடுகளும் அரசுத் தலைவர் தரப்பில் கிடையாது என்பதையும் அப்போதே தெரிவித்திருந்தேன். அதுவே இப்போது உண்மையாகி இருக்கின்றது.

தமிழ் அரசுக் கட்சி கடிதம் எழுதி, அதற்குப் பதில் கிடைக்கவில்லை என்று நினைவூட்டல்களும் அனுப்பிய பின்னரும் அரசுத் தலைவர் செயலகத்திலிருந்து அதற்கு எந்தவிதப் பதிலும் ஒரு மாதமாகியும் கிடைக்கவில்லை. அடுத்து வரக்கூடிய நாட்களிலும் பதில் கிடைப்பதற்கான வாய்ப்பில்லை என்றே தெரிகிறது.

இனப்பிரச்சினைக்கு புதிய அரசமைப்பு ஊடாகவே அரசியல் தீர்வு, அதிலும் தமிழர்களின் பிரச்சினையை மையப்படுத்திய தீர்வாக அன்றி அனைத்துத் தரப்புக்களுக்கும் தீர்வை வழங்கும் வகையிலான அரசமைப்பையே உருவாக்குவது, தீர்வு புதிய அரசமைப்பு ஊடாகத்தான் என்கிறபோது, மாகாண சபைத் தேர்தலை நடத்தி அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவதில் அர்த்தமில்லை போன்ற முடிவுகளை ஜேவிபியின் அரசியல் குழு எடுத்திருக்கக் கூடிய நிலையில் தமிழர் தரப்புடன் பேசுவதற்கு அரசுத் தலைவரிடம் இப்போதைக்கு எதுவும் இல்லை. அதனாலேயே அவர் காணி விடுவிப்பு உள்ளிட்ட தமிழர்களை திசை திருப்பக்கூடிய வேறு விடயங்களின் மீது கவனம் செலுத்தி வருகிறார்.

புதிய அரசமைப்பு கொண்டு வரப்பட்டால் அதனூடாக நிறைவேற்று அரசுத் தலைவர் முறைமை ஒழிக்கப்பட வேண்டும் என்பதிலும் ஜேவிபி அரசியல் குழு உறுதியாக இருக்கின்றது. ஆனால், அதற்கிடையில் அந்த அதிகாரத்தை முழுமையாகப் பயன்படுத்துவதிலும் அது குறியாக இருக்கின்றது. எனவே இந்த ஆட்சியின் இறுதிக் காலத்திலேயே அதாவது நான்காவது அல்லது ஐந்தாவது ஆண்டிலேயே புதிய அரசமைப்பு வரைவு விவாதத்திற்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதுவரையில் அரசுத் தலைவரிடமிருந்து எந்த உருப்படியான அரசியல் நகர்வுகளையும் தமிழர் தரப்புக்கள் எதிர்பார்ப்பதில் அர்த்தமில்லை என்கின்றன உள்வீட்டு விடயமறிந்த வட்டாரங்கள்.

கோட்டாபய ராஜபக்ச அரசுத் தலைவரான போது, அவர் சிங்கள மக்களின் ஏகப் பிரதிநிதியாக இருந்த காரணத்தால் புதிய அரசமைப்பு ஒன்றைக் கொண்டு வந்து இனப் பிரச்சினைக்கு ஏதோ ஒரு விதத்தில் தீர்வை வழங்கக்கூடிய சாத்தியம், வாய்ப்பு இருக்கின்றது என்ற நம்பிக்கை, எதிர்பார்ப்பு இருந்தது. ராஜபக்சக்களின் மீள் எழுச்சியின் பின்னணியில் கோட்டாபயவின் பெரு வெற்றியின் பின்னணியில் தமிழர்களுக்கு ஒரு தீர்வை அவர்கள் வழங்கினால் அதனை சிங்கள மக்களும் எதிர்ப்பின்றி ஏற்றுக்கொள்வார்கள் என்ற எதிர்பார்ப்பும் இருந்தது. அப்போது ராஜபக்சக்களுக்கு மிக மிக நெருக்கமாக அவர்களின் குடும்பத்திற்குள்ளேயே ஒருவராக இருந்த தமிழர் ஒருவர் சொன்னார் 'அவர்கள் ஒருபோதும் தமிழர்களுக்குத் தீர்வு தரமாட்டார்கள்' என்று. அந்த 'விடயமறிந்த வட்டாரம்' அவ்வளவு ஆழமாக ராஜபக்சக்களை அறிந்திருந்த காரணத்தால் அவ்வளவு உறுதியாகத் தெரிவித்தது. அதேபோன்றுதான் இப்போதும் உள்ளே இருக்கும் 'விடயமறிந்த வட்டாரங்கள்' இன்னும் இரண்டு மூன்று வருடங்களுக்கு தீர்வு பற்றிய பேச்சு வெறும் கானல் நீர்தான் என்று தெளிவாகச் சொல்கின்றன..

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## இலங்கையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவோம். கடந்த ஒரு வருடத்துக்குள் நூற்றுக்கும் மேற்பட்ட துப்பாக்கிச்சூடுகள் இடம்பெற்றுள்ளதோடு, 56 பேர் கொல்லப்பட்டுள்ளனர். வரலாற்றில் முதன்முறையாக பிரதேசசபைத் தலைவர் ஒருவர் தனது அலுவலகத்தில் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

அதற்கு முன்னர் நீதிமன்ற கட்டடத் தொகுதிக்குள் துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டது. இதற்கு முன்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இந்தளவுக்கு பாதுகாப்பற்ற சூழல் நாட்டில் ஏற்படவில்லை. தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாக தேசிய மக்கள் சக்தி வழங்கிய வாக்குறுதிக்கு என்ன ஆனது? எங்கு துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டாலும் அது பாதாள உலகக் குழுவுடன் தொடர்புடையது எனக் கூறி விடுகின்றனர்.

உண்மையிலேயே அந்த சம்பவங்கள் பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்புடையவையாகக் காணப்பட்டாலும், அதற்கான பொறுப்பு கூறலிலிருந்து அரசாங்கத்தால் விலக முடியாது. எனவே குற்றச்சாட்டுக்களை முன்வைத்துக் கொண்டிருப்பதை விடுத்து, இனிவரும் காலங்களில் இவ்வாறான சம்பவங்களைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம். குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய எவரையும் பாதுகாப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கக் கூடாது.

குறிப்பாக இலங்கை வரலாற்றில் இதற்கு முன்னர் எந்தவொரு பொலிஸ்மா அதிபரும் இந்தளவுக்கு அரசியல் மயப்படுத்தப்பட்டவராக இருக்கவில்லை. அரச அதிகாரியான அவருக்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தனிப்பட்ட ரீதியில் ஆளும்தரப்பைப் பாதுகாக்கும் வகையில் செயற்பட வேண்டிய அவசியமில்லை. நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் விதானவுக்கு உயிர் அச்சுறுத்தல் இருப்பதாக உறுதியாகியுள்ளது. அதற்கு காரணம் பாதாள உலகக் குழுவினருடனான தொடர்பு என பொலிஸ்மா அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

ஆளும்தரப்புக் கூறுவதைப் போலவே பொலிஸ்மா அதிபரும் எதிர்க்கட்சியினருக்கு பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்பிருப்பதாகக் குறிப்பிடுகின்றார். ஆனால் ஜே.வி.பி.யின் பெலவத்த அலுவலகத்துக்கும், தேசிய மக்கள் சக்தியின் தலைமையகத்துக்கும் பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் முன்னாள் அரசுத் தலைவர்கள் உட்பட மேலும் பல மக்கள் பிரதிநிதிகளுக்கான பாதுகாப்பு நீக்கப்பட்டுள்ளது. இவ்வாறான பக்கசார்பான நடவடிக்கைகளுக்கு ஆளும்தரப்பு நிச்சயம் பதிலளிக்க வேண்டும் என்றார்.

## கட்டுநாயக்கா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்திருந்த குற்றச்சாட்டுடன் தொடர்புடைய மூவரை கைது செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்தனர். இந்நிலையில் சந்தேகநபர்கள் மூவரும் கடந்த 15 நாட்களுக்கு முன்னர் நாட்டிலிருந்து தப்பிச்சென்றிருந்தனர்.

சந்தேகநபர்கள் கடல் வழியாக படகொன்றின் மூலம் இந்தியாவின் தமிழ் நாட்டுக்குத் தப்பிச்சென்றமை தெரியவந்துள்ளது. இந்தியாவில் தங்கிநிற்பதற்கான ஆவணங்கள், விசா என்பவை இல்லாத நிலையில் தப்பிச்சென்ற சந்தேகநபர்கள் இந்திய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் விசாரணைகளின் பின்னர் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டனர். சந்தேகநபர்கள் நேற்று அதிகாலை 12.37 மணியளவில் இந்தியாவின் சென்னையிலிருந்து புறப்பட்ட இன்டிகோ எர்லைன்ஸ் விமான சேவைக்கு சொந்தமான 6E-1175 என்ற விமானத்தின் மூலம் நாட்டை வந்தடைந்திருந்தனர்.

குறித்த மூவரையும் விமானநிலையத்தில் வைத்து பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினர் கைது செய்தனர். 27, மற்றும் 30 வயதுடைய வட்டுக்கோட்டை, செட்டிக்குளம், காந்திநகர் ஆகிய பகுதிகளை சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டனர்.

கிரிபத்கொட பகுதியில் கைது செய்யப்பட்ட ஒருவரிடமிருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில் வல்வெட்டித்துறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு பொலிஸாரால் மீட்கப்பட்டமை குறித்தே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களால் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்ட வெடிகுண்டு விடுதலைப் புலிகள் அமைப்புக்கு சொந்தமானது எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# இலங்கையில் கூட்டாட்சி குறித்து தமிழ் கட்சிகளுடன் ஆராய தயார்

### ஆளும்தரப்பு கூறியதாக சுவிஸ் தூதர் தெரிவிப்பு

இலங்கையில் கூட்டாட்சி முறைமையை (பெடரல்) அறிமுகப்படுத்துவது குறித்து தமிழ்க் கட்சிகளுடன் பேசுவதற்குத் தயாராக இருப்பதாக அண்மையில் சுவிற்சர்லாந்தில் ஒழுங்குசெய்யப்பட்டிருந்த செயலமர்வில் கலந்துகொண்ட ஆளும் தேசிய மக்கள் சக்தியின் பிரதிநிதிகள் கூறியதாக இலங்கைக்கான சுவிற்சர்லாந்து தூதுவர் சிறி வோல்ற் சுமந்திரனிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கை - சுவிற்சர்லாந்து நாடாளுமன்ற நட்புறவு சங்கத்துடன் கூட்டிணைந்து சுவிற்சர்லாந்து அரசின் ஏற்பாட்டில் அந்நாட்டின் கூட்டாட்சி அரசியல் முறைமை மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு வலுவாக்கம் என்பன பற்றி இலங்கையின் ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களுக்குத் தெளிவூட்டும் வகையிலான செயலமர்வொன்று செப்டெம்பர் 14 முதல் 21 வரை சுவிற்சர்லாந்தில் நடைபெற்றது.

அச்செயலமர்வில் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் அமைச்சர் கலாநிதி உபாலி பன்னிலகே, பிரதியமைச்சர் முனீர் முளப்பர், நாடாளுமன்ற உறுப்பினரும் தேசிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளருமான நிஹால் அபேசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான சந்திம ஹெட்டியாரச்சி, நிலாந்தி கொட்டஹச்சி, சமன்மலி குணசிங்க ஆகியோரும், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சி.அலவத்துவலவும், இலங்கைத் தமிழரசுக்கட்சியின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் பத்மநாதன் சத்தியலிங்கமும், அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும், ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் அதன் பொதுச்செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான தலதா அத்துகோரளவும், ஜனநாயக தமிழ்த்தேசியக் கூட்டணியின் சார்பில் அதன் ஊடகப்பேச்சாளர் சுரேஷ் பிரேமசந்திரனும், ஜேவிபியின் உறுப்பினர் டபிள்யூ.ரி.பத்மா மஞ்சுளவும், தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினரும் யாழ் மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவருக்கான ஒருங்கிணைப்பு செயலாளருமான கபிலன் சுந்தரமூர்த்தியும் கலந்துகொண்டனர்.

இச்செயலமர்வின்போது சுவிற்சர்லாந்தின் அரசியல் முறைமை மற்றும் இருதரப்பு உறவுகள், சுவிற்சர்லாந்தின் கூட்டாட்சி (பெடரல்) முறைமையை ஆழமாகப் புரிந்துகொள்ளல் ஆகிய தலைப்புக்களில் இலங்கை அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு விரிவான தெளிவூட்டல்கள் வழங்கப்பட்டதுடன் இதனுடன் தொடர்புடைய முக்கிய கட்டமைப்புக்களுக்கான களப்பயணங்கள் மற்றும் உயர்மட்ட சந்திப்புக்கள் என்பனவும் இடம்பெற்றன.

அதேவேளை இச்செயலமர்வின் ஓரங்கமாக நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கருத்துரைத்த தேசிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் நிஹால் அபேசிங்க, 2015 - 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் தயாரிக்கப்பட்ட புதிய அரசமைப்பு வரைவு தொடர்பில் ஆராயப்படுகிறது என்றும் அதில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் என அரசியல் கட்சிகளால் முன்மொழியப்பட்டவற்றை வாசித்து ஆராயும் பணிகள் முடிவுறும் தருவாயில் இருக்கின்றது என்றும் தெரிவித்திருந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில் இச்செயலமர்வு தொடர்பில் விளக்கமளிக்கும் நோக்கில் இலங்கைக்கான சுவிற்சர்லாந்து தூதுவர் சிறி வோல்ற்றின் அழைப்பின் பேரில் நேற்று கொழும்பிலுள்ள சுவிற்சர்லாந்து தூதரகத்தில் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் பொதுச்செயலாளர் சுமந்திரனுடன் நடைபெற்ற சந்திப்பின் போது மேற்படி செயலமர்வு குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

அதன்படி இலங்கையில் கூட்டாட்சி முறைமையை (பெடரல்) அறிமுகப்படுத்துவது குறித்து தமிழ்க் கட்சிகளுடன் பேசுவதற்குத் தயாராக இருப்பதாக செயலமர்வில் கலந்துகொண்ட ஆளும் தேசிய மக்கள் சக்தியின் பிரதிநிதிகள் கூறியதாக தூதுவர் சிறி வோல்ற் சுமந்திரனிடம் தெரிவித்துள்ளார்.

அதற்குப் பதிலளித்த சுமந்திரன், அரசியல் தீர்வு குறித்துப் பேசுவதற்கு நேரம் ஒதுக்கித் தருமாறு தாம் அரசுத் தலைவரிடம் கோரியுள்ள போதிலும், அதற்கு இன்னமும் பதில் கிடைக்கவில்லை எனச் சுட்டிக்காட்டினார். இருப்பினும் இதுகுறித்து சுவிற்சர்லாந்தில் நடத்தப்பட்ட செயலமர்வில் கலந்துகொண்ட தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்களுடன் பேசுவதற்குத் தாம் தயாராக இருக்கின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

## லஞ்சம் பெற்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்ற அலுவலக உதவியாளர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார். வழக்கு அறிக்கை ஒன்றின் சான்றுப் பிரதியொன்றை வழங்குவதற்காக 10 ஆயிரம் ரூபா பணத்தை இலஞ்சமாகக் கோரி பெற்றார் என்று இவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவம் தொடர்பில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு தகவல் அளிக்கப்பட்டுள்ளதுடன், சந்தேகநபர் வாழைத்தோட்டம் பொலிஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றின் முன்பாக வைத்து பணத்தை பெறும் சந்தர்ப்பதில் நேற்றுக் காலை 10.26 மணியளவில் கைது செய்யப்பட்டார். கைதான நபர் தொடர்பில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.

## பெலவத்த சீனித்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானித்துள்ளது. ஆளும்தரப்புடன் இணக்கமாக செயற்படும் பிரபல கசினோ சூதாட்டக்காரர் இந்திய நிறுவனத்தின் இலங்கைக்கான முகவராகச் செயற்படவுள்ளார்.

பெலவத்த சீனிக்கைத்தொழிற்சாலையின் நிதி நெருக்கடியை தீவிரப்படுத்தி தொழிற்சாலையை இந்தியாவுக்கு விற்பனை செய்யும் ஆளும்தரப்பின் முயற்சிக்கு எதிராக நாட்டு மக்கள் ஒன்றிணைய வேண்டும் என்றார்.

## மார்மத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்தவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். மேலும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இருவரும் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருவதுடன் நுவரெலியா பொலிஸார் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## அடுத்த 5....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனும் தலைப்பில் செவ்வாய்க்கிழமை கொழும்பிலுள்ள மரினோ ஹோட்டலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றுகையிலேயே சீனத் தூதுவர்

தொடர்ச்சி 6ம் பக்கம்....


JDr
JDR CARE HOME
&
MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான
பூரண வசதிகளுடனான
பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane,
Jaffna

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மக்களின் நம்பிக்கைக்கு மீண்டும் ஒரு சவால்

இலங்கையின் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, அண்மையில் 1,775 நான்கு சக்கர, டீசல் இயக்கம் கொண்ட ‘டபுள் காப்’ வாகனங்களை வாங்குவதற்கான பெரிய அளவிலானஒப்பந்தஅழைப்பை (Tender) அறிவித்துள்ளது. இப்பெரும் கொள்முதல், பல பில்லியன் ரூபாய்க்கு மதிப்பிடப்பட்டதாகவும், வெறும் 12 நாட்கள் மட்டுமே ஒப்பந்தம் சமர்ப்பிக்க நேரமளிக்கப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவ்வொப்பந்தம் நவம்பர் 4 ஆம் திகதியுடன் முடிவடைகிறது. அரசின் அபிவிருத்தித் திட்டங்கள் விரைவாக முன்னேற வேண்டும் என்பதே இதன் காரணம் என விளக்கப்படுகிறது.

பொதுவாக, அபிவிருத்தித் திட்டங்களுக்குத் தேவையான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்துவது ஒரு நியாயமான நிர்வாக நடவடிக்கையாகத் தோன்றலாம். ஆனால் இங்கு முக்கியமான கேள்விகள் எழுகின்றன — ஏன் இத்தனை அவசரம்? ஏன் இத்தனை பெரிய அளவிலான கொள்முதல் குறித்து பொதுமக்கள் முன் விளக்கம் தரப்படவில்லை? மற்றும் ஏன் வெறும் 12 நாட்கள் மட்டுமே ஒப்பந்ததாரர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது?

நாடாளுமன்றக் கணக்கு அலுவல்கள் குழுவின் (COPE) முன்னாள் தலைவர் பேராசிரியர் சரித ஹேரத் இதை சமூக ஊடகத்தில் வெளிப்படையாகக் கேள்விக்குட்படுத்தியுள்ளார். “இத்தனை பெரும் அளவிலான வாகன கொள்முதல் எதற்காக இவ்வளவு விரைவில் செய்யப்படுகிறது? இதற்கான நியாயமான விளக்கம் எது? யார் இவ்வாகனங்களைப் பயன்படுத்தப் போகிறார்கள்?” என்ற கேள்விகளை அவர் எழுப்பியுள்ளார்.

இக்கேள்விகள் வெறும் அரசியல் குற்றச்சாட்டுகளல்ல — ஒவ்வொரு பொறுப்பான குடிமகனும் கேட்க வேண்டிய அடிப்படை நிதி பொறுப்புக் கேள்விகள். நிதி நெருக்கடியால் மக்கள் கடுமையான வரிவிதிப்புகளையும், விலையுயர்வையும் தாங்கிக் கொண்டிருக்கின்றனர். அத்தகைய நேரத்தில், ஆளும்தரப்பு கோடிக்கணக்கான ரூபாய்களை புதிய வாகனங்களுக்காக ஒதுக்குவது மக்களின் நம்பிக்கையை மீண்டும் தளர்த்தக்கூடிய செயல்.

இதே அரசு சில ஆண்டுகளுக்கு முன்பு, முன்னாள் ஆட்சியாளர்கள் பயன்படுத்திய வாகனங்களை “அவசியமில்லாத ஆடம்பரம்” எனக் கூறி ஏலத்தில் விட்டது. இன்று அதே அரசு ஆயிரக்கணக்கான புதிய வாகனங்களை வாங்க முயல்கிறது. இது மக்கள் மத்தியில் இயல்பாகவே கேள்விகளையும், அதிருப்தியையும் எழுப்புகிறது.

இவ்வளவு பெரும் அளவிலான கொள்முதல் குறைந்தது சில மாதங்கள் முன்கூட்டியே திட்டமிடப்பட்டிருக்க வேண்டும். வாகனங்கள் உண்மையில் தேவைப்பட்டால், ஏன் ஒரே நேரத்தில் 1,775 வாகனங்கள்? ஏன் அனைத்தும் “டபுள் காப்” வகை வாகனங்களாக இருக்க வேண்டும்? ஏற்கனவே அரசுப் பிரிவுகளில் உள்ள பழைய வாகனங்களுக்கு என்ன ஆனது? அவற்றை புதுப்பிக்க முடியாதா?

மேலும், ஒப்பந்தம் முடிவடையும் நாள் நவம்பர் 4 — அதாவது 2026ஆம் ஆண்டுக்கான நிதி வரவு–செலவுத் திட்டம் (Budget) நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் நவம்பர் 7க்கு மூன்று நாட்களுக்கு முன்பு. இது சீரான நிகழ்ச்சித் தொடர்பா, அல்லது ஆளும்தரப்பு புதிய நிதிச் சட்டத்தின் கண்காணிப்புக்கு முன்பே ஒப்பந்தத்தை முடிக்க விரும்புகிறதா என்ற சந்தேகம் எழுகிறது.

நல்லாட்சியின் அடிப்படை வெளிப்படைத்தன்மை (Transparency) என்பதே. குறிப்பாக, பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீள போராடும் நாட்டில், ஒவ்வொரு பொது செலவையும் வெளிப்படையாகச் செய்யவேண்டும். இத்தகைய பெரிய அளவிலான கொள்முதல் நடவடிக்கைகள் தெளிவான விளக்கங்களுடனும், பொதுவான நியாயத்துடனும் நடத்தப்படவேண்டும். மக்கள் ஆளும்தரப்பிடம் நம்பிக்கை வைக்க வேண்டும் என்றால், அந்த நம்பிக்கைக்கு அரசு தகுதியை நிரூபிக்க வேண்டும்.

இன்று, சர்வதேச நாணய நிதியம் (IMF) இலங்கையின் செலவுகள் மற்றும் கடன் நிர்வாகத்தை நெருக்கமாகக் கண்காணிக்கிறது. மக்கள் அதிக வரிவிதிப்புகளையும் சேவைக் குறைப்புகளையும் ஏற்றுக்கொண்டுள்ள நேரத்தில், இத்தகைய ஆடம்பரமான கொள்முதல் செய்திகள் வெளிவருவது நியாயமா? பொதுமக்கள் தங்கள் வளையத்தை இறுக்கிக் கட்டிக்கொண்டு இருக்கும்போது, ஆட்சி அமைப்புகள் ஆடம்பர வாகனங்களில் பயணம் செய்வது எந்த நீதி?

ஆளும்தரப்பு உண்மையாகவே இதை அபிவிருத்திக்கான அவசியமான நடவடிக்கை எனக் கூறினால், அதற்கான முழுமையான விளக்கத்தை பொதுமக்களுக்கு வழங்க வேண்டியது அதன் கடமை. எந்தத் துறைகள், எந்தப் பணிகளுக்காக, எந்த மதிப்பீட்டின் அடிப்படையில் இவ்வாகனங்கள் தேவைப்படுகின்றன என்பதற்கான தெளிவான விவரங்கள் வெளியிடப்பட வேண்டும்.

இலங்கையின் பொருளாதார மறுமலர்ச்சிக்கு அடிப்படை நம்பிக்கை, நிதி ஒழுங்கு மற்றும் பொது நம்பிக்கை தான். அவற்றை மீண்டும் பெற ஒரே வழி — வெளிப்படைத்தன்மை. இவ்வொப்பந்தம் அதற்கான சோதனைக் கல். ஆளும்தரப்பு இதற்கான விளக்கத்தைத் தருகிறதா இல்லையா என்பது, அதன் பொறுப்புணர்வின் உண்மையான அளவுகோலாகப் பதிவாகும்.

## பலாலி காணிகளை கையளிப்பது பற்றி பாதுகாப்பு அமைச்சில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் – பலாலிப் பிரதேசத்தில் உயர் பதுகாப்பு வலயத்தில் எஞ்சியுள்ள காணிகளை அவற்றின் தனிப்பட்ட காணி உரிமையாளர்களுக்கு துரிதமாகக் கையளிப்பது குறித்து பாதுகாப்பு அமைச்சில் உயர்மட்ட கலந்துரையாடலொன்று செவ்வாய்கிழமை இடம்பெற்றுள்ளது.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் அருண ஜயசேகர தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் பாதுகாப்புச் செயலாளர் ஓய்வு பெற்ற எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்தா உட்பட சிரேஷ்ட பாதுகாப்பு மற்றும் நிர்வாக அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

அதற்கமைய குறித்த காணிகளை உரிமையாளர்களடம் மீளக் கையளிப்பதற்காக இராணுவத்தின் கட்டம் கட்டமான வெளியேற்றத்தை மீளாய்வு செய்தல் உள்ளிட்ட செயற்பாடு மற்றும் நிர்வாக ரீதியான தடைகளைத் தீர்ப்பதில் இக் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட பிரதேசத்தில் உள்ள தனியார் காணிகளை அதன் உரிமையாளர்களிடம் விடுவிப்பது தொடர்பான முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்கும், தொடர்ந்து நிலவும் சவால்களைத் தீர்ப்பதற்கும் இதன் போது தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்தியாவசியமான பாதுகாப்புத் தளங்களின் தொடர்ச்சியான பாதுகாப்பை உறுதி செய்யும் அதே வேளையில், சிவில் சொத்துக்களில் ஏற்படும் தாக்கத்தைக் குறைக்கும் நோக்கில் புதிய எல்லைகளை இறுதி செய்வது குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

பிரதி பாதுகாப்பு அமைச்சர் மற்றும் பாதுகாப்புச் செயலாளர் ஆகிய இருவரும், தேசிய நல்லிணக்கத்தின் ஒரு முக்கிய அங்கமாக காணி தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அரசாங்கம் கொண்டுள்ள தளராத உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தினர். இந்தச் செயல்முறையானது வெளிப்படைத்தன்மை மற்றும் சமத்துவம் கொண்டதாக இருக்க வேண்டும் என்றும், தேசியப் பாதுகாப்புக் கருத்தாய்வுகளுடன் முழுமையாக ஒத்துப்போக வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.

## வி.எவ்.எஸ். நிறுவனம் விளக்கம்

உலகளாவிய விசா செயலாக்க சேவை நிறுவனமான வி.எப்.எஸ்., இணையவழி விசா வழங்கும் முறை தொடர்பான சிறப்பு கணக்காய்வுக்காக தேவைப்படும் முழுமையான ஒத்துழைப்பையும் தகவல்களையும் வழங்குவதாக கடந்த ஆண்டு நவம்பரில் கணக்காய்வு தலைமை அலுவலகத்துக்கு தான் அறிவித்ததாகத் தெரிவித்துள்ளது.

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் இணையவழி விசா வழங்கும் முறை குறித்த விசேட கணக்காய்வு அறிக்கை பற்றி அண்மையில் வெளியான செய்திகளுக்குப் பதிலளிக்கும் வகையில் அறிக்கையொன்றை வெளியிட்டு வி.எப்.எஸ். நிறுவனம் இதனைத் தெரிவித்துள்ளது.

ஜி.பி.எஸ். தொழிநுட்ப சேவை அன்ட் ஐ.வி.எஸ். குளோபல் எப்.இசட்.கோ, வி.எப். வோல்ட் வைட் ஹோல்டிங்ஸ் நிறுவனம் மற்றும் இலங்கை குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் என்பன இலத்திரனியல் வீசா மற்றும் அது தொடர்பான சேவைகளை வழங்குவதற்காக 2023 டிசெம்பர் 21 ஒரு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன. இந்த ஒப்பந்தத்தின் விதிமுறைகளுக்கமைய, வி.எப்.எஸ். குளோபல் நிறுவனம் ஒரு தொழில்நுட்பப் பங்காளியாக மட்டுமே வரையறுக்கப்பட்ட பங்கு வகித்தது. ஐ.வி.எஸ். - ஜி.பீ.எஸ். ஆகிய நிறுவனங்கள் பிரதான ஒப்பந்தக்காரராக இருந்ததாகவும் அந்நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

மேலும் உலகளவில், வி.எப்.எஸ். நிறுவனமானது தனது அனைத்து வாடிக்கையாளர் அரசுகளுடனும் வெளிப்படைத்தன்மை மற்றும் ஒருமைப்பாட்டுக்கு ஆழமாக உறுதிபூண்டுள்ளதுடன், அதற்கமைய இலங்கையின் உரிய அதிகாரிகளின் அறிவுறுத்தல்களுக்கு நல்லெண்ணத்துடன் முழுமையாக இணங்கியுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது.

கணக்காய்வு நடத்தப்படவுள்ளது என்பதை அறிந்தவுடனே, வி.எப்.எஸ். குளோபல் நிறுவனமானது 2024 நவம்பர் 7 கணக்காய்வு தலைமை அலுவலகத்துடன் ஒரு தொடர்பை ஏற்படுத்தி, முழுமையான ஒத்துழைப்பையும் தேவையான எந்தவொரு தகவலையும் வழங்குவதாக அறிவித்தது. இந்தத் தொடர்பு குறித்து கணக்காய்வு தலைமை அலுவலகத்திடமிருந்து எந்தப் பதிலும் கிடைக்காதபோதும், வி.எப்.எஸ். ஆனது, தேவைப்படும்போது, தணிக்கை தலைமை அலுவலகத்துக்கோ அல்லது இலங்கை ஆளும்தரப்பின் வேறு எந்தவொரு அதிகாரசபைக்கோ தனது முழு ஆதரவையும் வழங்கத் தயாராக உள்ளதாக அந்த நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

## மணலுடன் 2 உழவியந்திரங்களை மடக்கியது கொடிகாமம் பொலிஸ்

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கிளாலிப் பகுதியில் சட்டவிரோதமாக மணல் அகழ்ந்த இரண்டு உழவு இயந்திரங்களை கொடிகாமம் பொலிஸார் கைப்பற்றியுள்ளதுடன் சந்தேகநபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர். இந்த சம்பவம் நேற்றுக் அதிகாலை 3 மணியளவில் கிளாலிப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கொடிகாமம் பொலிஸார் குற்றங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் அண்மைக்காலமாக அதிரடி நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில் தான் கடந்த வாரம் பொலிஸாரின் கட்டுப்பாட்டை மீறி பொலிஸாருக்கு ஆபத்து ஏற்படுத்தும் வகையில் சட்டவிரோத மணலுடன் தப்பியோடிய உழவு இயந்திரம் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதன் பின்னர் கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் எஸ் .பி. திஸ்ஸாநாயக்க தலைமையிலான பொலிஸ் குழுவினர் இன்று அதிகாலை குறித்த பகுதிகளில் விசேட சுற்றி வளைப்பை மேற்கொண்டிருந்தனர். இதன் போதே சட்டவிரோத மணலுடன் இரண்டு உழவு இயந்திரங்களைக் கைப்பற்றியுள்ளதுடன் ஒருவரைக் கைது செய்துமுள்ளனர் அதேவேளை ஏனையவர்கள் தப்பியோடியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. சம்பவம் தொடர்பான விசாரணைகளைக் கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





காலைக்கதிர் Kalaikkathir

# அரச – தனியார் பேருந்து சேவை எதிர்காலம் குறித்து யாழ் மாவட்ட எம்.பிக்கள் நேற்றுக் கூட்டாக ஆராய்வு

யாழ்மாவடத்தில்சேவையில்ஈடுபடும்அரசமற்றும்தனியார் பேருந்து சேவையின் எதிர்கால திட்ட முன்மொழிவு குறித்தும் அதன் சவால்களை ஆராயும் முகமாகவும், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரச அதிகாரிகள் ஆகியோர் நேற்று நேரடியாக களத்திற்குச் சென்று பார்வையிட்டுக் சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடினர்.

ஆளும்கட்சியின்நாடாளுமன்றஉறுப்பினர்இளங்குமரன், யாழ்மாவட்டநாடாளுமன்றஉறுப்பினர்களானகஜேந்திரகுமார், ஸ்ரீதரன் மற்றும் யாழ் மாவட்ட மேலதிக செயலாளர் சிவகரன், உள்ளூராட்சி ஆணையாளர் சுதர்சன், யாழ்ப்பாணம் பிரதேச செயலர், யாழ் மாநகர மற்றும் பிரதேச செயலக அதிகாரிகள், நகர அபிவிருத்தி அதிகாரசபை பொறியியலாகர்கள், துறைசார் அதிகாரிகள், தனியார் போக்குவரத்து சேவையின் தலைவர், அரச போக்குவரத்து சபையின் அதிகாரிகள் ஆகியோர் இந்த ஆய்வில் ஈடுபட்டனர்..

நெடுந்தூர சேவை போருந்து நிலையம், இலங்கை போக்குவரத்து சபையின் யாழ் மத்திய பேருந்து நிலையம் உள்ளிட்ட பகுதிகளை பார்வையிட்டதுடன் குறித்த இரு பேருந்து நிலையங்களின் அதிகாரிகளுடனும் கலந்துரையாடி இருக்கும் சவால்கள் குறித்துக் கேட்டறிந்து கொண்டனர்.

குறிப்பாக தூர சேவை பேருந்து நிலையத்தில் இருந்து இரு பேருந்து சேவைகளையும் இணைந்த சேவை நேர அட்டவணையின் பிரகாரம் முன்னெடுப்பதில் இருக்கின்ற பிரச்சினைகள் குறித்து கூடுதல் அவதானம் செலுத்தப்பட்டது.

அத்துடன் விரைவில் அதை நடைமுறைப்படுத்துவதற்காக பொறிமுறை விரைவில் உயர் மட்டக் கலந்துரையாடலின் ஊடாக எட்டப்படும் என்றும் குறித்த பேருந்து நிலையத்தின் பாதுகாப்புக் கருதி ளீளீவீா கமராக்கள்ன்பிருத்தல் மற்றும் இருக்கின்ற மலசல கூடங்களுடன் மேலும் சில மலசல கூடங்களை கட்டமைத்தல் உள்ளிட்ட விடையங்களை ஏற்பாடு செய்யவும் பரிந்துரைக்கப்பட்டது.

இதேவேளை இ.போ.ச வின் யாழ் மத்திய பேருந்து நிலையத்தில் இருக்கின்ற தூய்மையாக்கல் பிரச்சினைகள் தொடர்பில் அதிக அவதானம் செலுத்தப்பட்டதுடன் அவ்வாறு தேங்கி கிடக்கும் குப்பைகள் பிளாஸ்ரிக் பொருட்களை



உடனடியாக அகற்ற வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டது.

மேலும்பேருந்துநிலையத்தில்இருக்கின்றசிறுகடைகளால் ஏற்படும்அசௌகரியங்களை நேரில் அவதானிக்கப்பட்டதுடன் அவற்றை அகற்றுவது தொடர்பிலும் அகற்றப்பட்ட பின்னர் பாதிக்கப்படும் வியாபாரிகதுக்கு பரிகாரம் வழங்குவது குறித்தும் இதன்போது அவதானம் செலுத்தப்பட்டது.

இதேவேளை, தமக்கான ஊதியத்தைகுறித்தகாலப்பகுதியில் மாதாந்தம் வழங்குவதுடன் அரச போக்குவரத்து சேவையை திணைக்களம் ஆக்கும் பட்சத்தில் அதிகாரிகள் கூறுவது போன்று இணைந்த சேவையை முன்னெடுக்க தாம் தயாராக இருப்பதாக இ.போ.சபையின் யாழ் பிராந்திய நேரக்கணிப்பாளர் தெரிவித்துள்ளார்

'எமது சபை மிக நஷ்டத்தில் இருக்கின்றது. ஊதியங்கள் கூட ஒழுங்காக கிடைப்பதில்லை. இதற்கெல்லாம்தனியார்சேவையின்காட்டுமிராண்டித் தனமான செயற்பாடுகளே காரணமாகவிருக்கின்றன.

இவ்வாறான நிலையில் சாத்தியமற்ற ஒரு நடவடிக்கையை சாத்தியமாக்க நாடாளுமன்ற உறுப்பினர்களும்அரசஅதிகாரிகளும்அழுத்தங்களை எம் மீது திணிக்கின்றனர்.

நாம் தனிப்பட்ட ஒரு கட்டமைப்பு. எமக்கென ஒரு வரையறை இருக்கின்றது. இதை மீறி நாம் செயற்படவில்லை. எமதுசபையின்அபிவிருத்திகளுக்கு நாம் தடையாக இருக்கப் போவதில்லை. ஆனால் அதிகாரிகளும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் நினைப்பது போன்று இணைந்த சேவையை நடத்த வேண்டுமானால் முதலில் எமது ஊதியத்தை குறித்த காலப்பகுதியில் மாதாந்தம் வழங்குவதுடன்அரசபோக்குவரத்துசேவையைதிணைக்களம் ஆக்க இவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு நடைபெற்றால் நாம் அவர்களின் கருத்தின் படி செயற்படுவோம்' என்று அவர் மேலும் தெரிவித்தார்.

'சாத்தியமற்றதென எதுவும் இல்லை. நெடுந்தூர பேருந்து நிலையத்திலிருந்து சேவைகளை முன்னெடுப்பதற்கு தடையாக இருக்கின்ற அவசிய தேவைப்பாடுகளை நிறைவு செய்து கொடுக்க யாழ் மாவட்ட தனியார் போக்குவரத்து சேவை தயாராக இருக்கிறது' என்று அச்சங்கத்தின் தலைவர் கெங்காதரன் தெரிவித்துள்ளார்.

'தூர சேவை பேருந்து நிலையத்தில் இருந்து இணைந்த சேவைய நடத்த தடைகள் சில இருப்பதாக கூறப்படுகின்றது. குறிப்பாக ளீளீவீா பாதுகாப்பு கட்டமைப்பு மற்றும் மலசல கூட விரிவாக்கம் போன்றன சுட்டிக்காட்டப்படுகின்றது. நாம் இணைந்த சேவையை சாத்தியமாக்கி மக்களுக்கு இலகுவான அசௌகரியமற்ற சேவையை வழங்கவே விரும்புகின்றோம். அதனடிப்படையில் சுட்டிக்காட்டப்படும் தேவைப்பாடுகளை எமது சங்கம் தீர்த்துவைக்க நடவடிக்கை எடுக்கும்' என்றும் அவர் தெரிவித்தார்.






காலைக்கதிர் Kalaikkathir

## அடுத்த 5........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

1949ஆம் ஆண்டு மக்கள் சீனக்குடியரசு நிறுவப்பட்ட வேளையில், தனியொரு கார், விமானம், கனரக வாகனத்தைக்கூட சீனாவினால் உற்பத்தி செய்யமுடியவில்லை. அதனைத் தொடர்ந்து 1953ஆம் ஆண்டு முதன்முதலாக ஐந்தாண்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டபோது சீனாவினால் வடிவமைக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்ட 14 திட்டங்கள் இப்போதும் அமுலில் உள்ளன. அதன்மூலம் விவசாய நாடாகத் திகழ்ந்த சீனா உலகளாவிய ரீதியில் பெரும் கைத்தொழில் உற்பத்தியாளராகவும், பெரும் வர்த்தக நாடாகவும், மிக உயர்ந்தளவு வெளிநாட்டுக் கையிருப்பை வைத்திருக்கும் நாடாகவும், உலகின் இரண்டாவது பெரிய பொருளாதாரத்தைக் கொண்ட நாடாகவும் நிலைமாற்றமடைந்தது.

அதுமாத்திரமன்றி உலகளாவிய ரீதியில் மிக அரிதாகவே எட்டப்பட்டிருக்கும் அடைவுகளான தொடர் பொருளாதார வளர்ச்சி மற்றும் நீண்டகால சமூக உறுதிப்பாடு ஆகிய இரண்டையும் சீனா அடைந்துள்ளது.

சீனப் பொருளாதாரமானது வலுவான அடித்தளம், பல்வகை வாய்ப்புக்கள், மீண்டெழும் தன்மை மற்றும் ஆழமான இயலுமை என்பவற்றைக் கொண்டமைந்திருக்கின்றது. அத்தோடு பல்வேறு உள்ளக மற்றும் வெளியக அச்சுறுத்தல்களையும், சவால்களையும் கையாள்வதற்கான தகைமையும், தன்னம்பிக்கையும் சீனாவிடம் உள்ளது.

சீனாவின் நீண்டகால ஒத்துழைப்புப் பங்காளிஎன்றரீதியில், அடுத்த 5வருடகாலத்தில் சீன அடையவிருக்கும் வளர்ச்சியானது இலங்கையின் அபிவிருத்திக்கும், சுபீட்சத்துக்கும் அவசியமான வாய்ப்புக்களை வழங்கும். இவ்வருடத்தின் தொடக்கத்தில் அரசுத் தலைவர் அநுரகுமார சீனாவுக்கு வருகை தந்திருந்தார். இதன்போது இருநாட்டுத் தலைவர்களுக்கும் இடையில் பரஸ்பர அபிவிருத்தி மற்றும் ஒத்துழைப்பு சார் இணக்கப்பாடுகள் எட்டப்பட்டன.

அதேபோன்று இரண்டு வாரங்களுக்கு முன்னர் பிரதமர் ஹரினி சீனாவுக்கு வருகை தந்திருந்தார். இந்நிலையில் எமது பரஸ்பர அபிவிருத்தித் திட்டங்கள் சார் நடவடிக்கைகளை வலுப்படுத்துவதை முன்னிறுத்தி இலங்கையுடன் நெருக்கமாகப் பணியாற்றத் தயாராக இருக்கின்றோம் என்றார்.

## சான்றுப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதைப் பரிசோதித்தப்போது கைத்துப்பாகியை மீட்டிருந்தனர்.

சம்பவத்தை அடுத்து மீண்டும் நீதிமன்றத்துக்கு வந்த சிறைச்சாலை அதிகாரிகள் வழக்குப்பொருள் வைக்கப்படும் களஞ்சியசாலையில் இருந்த 9 எம்.எம் ரக துப்பாக்கி திருடப்பட்டமை தொடர்பில் நீதிமன்ற பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர். துப்பாக்கியை திருடிய கைதி கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் சிறைச்சாலை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

# கெரோயின், போதை மாத்திரைகளுடன் யாழ். நகரப் பகுதியில் நால்வர் கைது

யாழ்ப்பாணம் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் நேற்று(29) மாலை யாழ்ப்பாணம் போலீஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைபின் போது 25 வயதுகளையுடைய நான்கு இளைஞர்கள் யாழ் நகரப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்

இவரிடமிருந்து 90 மில்லி கிராம் கெரோயின் மற்றும் ஏழு போதை மாத்திரைகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# எதிர்க்கட்சிகளின் நவம்பர் 21 பேரணிக்கு முன் என்னைக் கைது செய்ய ஆளும்தரப்பு முயற்சி

## உதய கம்மன்பில குற்றச்சாட்டு

ஒன்றிணைந்த எதிர்க்கட்சிகளின் பேரணி நவம்பர் 21 நுகேகொடயில் நடைபெறவுள்ளது.இதற்கு முன்னர் என்னை கைது செய்து இரண்டு வாரங்களேனும் சிறையில் அடைக்க ஆளும்தரப்பு முயற்சிக்கிறது. என்னை கைது செய்வதற்கு அரசாங்கம் ஐந்து முறை முயற்சித்து தோல்வியடைந்தது. இந்த முறையும் முயற்சிக்கிறது. இந்த முறை சிறை செல்வதற்கு நானும் தயாராகவுள்ளேன் என பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள பிவிதுறு ஹெல உறுமய கட்சியின்தலைமை காரியாலயத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசசார்பற்றநிறுவனத்தின்உறுப்பினர்கள் ஊடாக எனக்கு எதிராக முறைப்பாடளித்து, சாட்சியம் திரட்டும் நடவடிக்கைகளை இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகள் மேற்கொண்டுள்ளார்கள். இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் நியமிக்கப்பட்ட முறைமை குறித்து நான் ஊடகங்களுக்கு வெளிப்படுத்திய விடயங்களினால் பணிப்பாளர் நாயகத்தின் புகழுக்கு களங்கம் ஏற்பட்டுள்ளதாகவும், அரசியலமைப்பின் 125 ஆவது பிரிவின் பிரகாரம் நான் தண்டனைக்குரிய குற்றம் புரிந்துள்ளதாகவும் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

முறைப்பாடளித்தவரை காட்டிலும், முறைப்பாட்டை பதிவு செய்த உத்தியோகத்தருக்கே இந்த முறைப்பாடு குறித்து அதிக அக்கறை காணப்பட்டுள்ளது. அரசுத் தலைவர் செயலகம், மக்கள் விடுதலை முன்னணியின் காரியாலயம் உட்பட அரச நிறுவனங்களில் எமது ஆதரவாளர்கள் இருப்பதை போன்று இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிலும் எமது ஆட்கள் உள்ளார்கள். நடப்பவற்றை எமக்கு குறிப்பிடுவார்கள்.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயக பதவிக்கு மாதவ தென்னக்கோனுக்கு முழுமையான தகுதி காணப்பட்ட நிலையில் ஜனாதிபதி,பிரதமர் மற்றும் சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க ஆகியோரின் தலையீட்டினால் தான் தெரிவில் இரண்டாம் நிலையில் இருந்த ரங்க திஸாநாயக்க பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டார். இந்த நியமனம் முறைகேடானதுஎன்பதைசாட்சியங்களுடன் வெளிப்படுத்தினேன்.

வதந்திகளை அடிப்படையாகக் கொண்டு நான் இவற்றை குறிப்பிடவில்லை. உயர்நீதிமன்றத்துக்கு முன்வைக்கப்பட்ட சத்தியபிரமாண கூற்றை அடிப்படையாகக் கொண்டே இவற்றை குறிப்பிட்டேன்.மோசடியாள முறையில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் அந்த பதவிக்கு நியமிக்கப்படுவாராயின், அதை விட பாரதூரமான மோசடி பிறிதொன்றும் கிடையாது. தவறை திருத்திக் கொள்வதற்கு அரசாங்கம் எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.மாறாக ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் ஊடாக எம்மை பழிவாங்க முயற்சிக்கிறது.

ஒன்றிணைந்த எதிர்க்கட்சிகளின் பேரணி எதிர்வரும் மாதம் 21 ஆம் திகதி நுகேகொடயில் நடைபெறவுள்ளது. இதற்கு முன்னர் என்னை கைது செய்து இரண்டு வாரங்களேனும் சிறையில் அடைக்க அரசாங்கம் முயற்சிக்கிறது. என்னை கைது செய்வதற்கு ஆளும்தரப்பு ஐந்து முறை முயற்சித்து தோல்வியடைந்தது. இந்த முறையும் முயற்சிக்கிறது. இந்த முறை சிறை செல்வதற்கு நானும் தயாராகவுள்ளேன்.

பொலிஸ்உயரதிகாரிகளிடமிருந்துபுலனாய்வுதகவல்களை பெறும் யூடியுபர் ஒருவர் மாதம் இலட்சக்கணக்கில் உழைக்கிறார். எனக்கு சேறு பூசும் பொறுப்பை ஆளும்தரப்பு இந்த நபரிடம் ஒப்படைத்துள்ளது. உழைக்கும் பணத்தை இவர் சேமித்து வைத்துக் கொள்ளவேண்டும் . இவருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வேன் என்றார்.









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.10.2025இல் வெளியிடப்பெற்றது